சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், 'ஓயாசிஸ்' என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பெறும் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியினை தொடர்ந்து செயல்படுத்துதல் – 2014–15 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.9.33 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண்.39** **நாள் 29.06.2015**

**மன்மத–ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.89, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 15.10.2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.3102/மாதிந.2.1/ 2014, நாள் 12.01.2013.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், 'ஓயாசிஸ்' எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பெறும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியினை, 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டத் தொடராணையும், இத்திட்ட தொடர் செலவினத்திற்கென, ரூ.9.33 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இத்தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில், ஓயாசிஸ் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பெறும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிக்கு தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.9,33,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு அரசினால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில், ''ஓயாசிஸ்'' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பெறும் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியினை, 2014–2015 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும், இத்திட்ட தொடர் செலவினத்திற்கென ரூ.9,33,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பத்து மூவாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இத்தொகையினை பெற்று வழங்கிட, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியருக்கான மதிப்பூதியம் (ரூ.12,000/– x 12 மாதங்கள்) | 1,44,000/– |
| 2. | முதுநிலை ஆசிரியருக்கான மதிப்பூதியம் (ரூ.10,000/– x 12 மாதங்கள்) | 1,20,000/– |

[த.பி.பா]

| | | |
|---|---|---|
| 3. | இளநிலை ஆசிரியருக்கான மதிப்பூதியம்<br>(ரூ.10,000/– x 2 ஆசிரியர்கள் x 12 மாதங்கள்) | 2.40,000/– |
| 4. | ஆயா / பாதுகாவலருக்கான மதிப்பூதியம்<br>(ரூ.3,000/– x 3 நபர்கள் x 12 மாதங்கள்) | 1,08,000/– |
| 5. | தொழிற் பயிற்றுநருக்கான மதிப்பூதியம்<br>(ரூ.8,000/– x 12 மாதங்கள்) | 96,000/– |
| 6. | மருத்துவ ஆலோசனை<br>அ) மனநல மருத்துவர் (ரூ.500/– x 4 முறை x 11 மாதங்கள்) | 22,000/– |
| | ஆ) தசைப் பயிற்சியாளர் / பேச்சுப் பயிற்சியாளர் / தொழில்முறை பயிற்சியாளர் (ரூ.500/– x 4 முறை x 11 மாதங்கள்) | 22,000/– |
| 7. | வாடகை (ரூ.10,000/– x 12 மாதங்கள்) | 1,20,000/– |
| 8. | இதர செலவினம் (ரூ.1,000/– x 11 மாதங்கள்) | 11,000/– |
| 9. | தொழிற் பயிற்சி மையம் : மூலப் பொருட்கள் | 50,000/– |
| | **மொத்தம்** | **ரூ.9,33,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235-சமூகப் பாதுகாப்பும் மற்றும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்து ஆண்டுத் திட்டப் பணிகள் – II–மாநிலத் திட்டம் – M.G.–மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசுசாரா அமைப்புகளுக்கு நிதியுதவி – 09–உதவித் தொகை – 01–நடப்புச் செலவுக்கான உதவித் தொகை“ (த.தொ.கு.2235–02–101–M.G.–0914).**

5. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.22807/நிதி(சந)/2015, நாள் 24.06.2015–ன்படி, வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–15.
**நகல்**
நிதித் (சந) துறை, சென்னை–9.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், கடலூர் மாவட்டம்.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்